முழுப் பதிப்புரிமையுடையது.

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# மட்டம் I பரீட்சை – 2024 யூலை

# (104) வணிகச் சூழல்

(Business Environment)

2024-08-18
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 06
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.1** வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனியொன்றின் பங்குதாரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை :

(1) 2. (2) 1. (3) 20. (4) 50.

**1.2** கீழ்வருவனவற்றுள் மனிதத் தேவைகளுக்கான (human needs) உதாரணமாக அமைவது எது?

(1) பாண். (2) உணவு. (3) தொழில் பாதுகாப்பு. (4) மேற்சட்டைகள்.

**1.3** கீழ்வருவனவற்றுள் சிறந்த பணத்தின் பண்பாக **அமையாதது** எது?

(1) ஏற்றுக்கொள்ளும் தன்மை. (2) பிரிபடும் தன்மை.

(3) நீடித்த தன்மை. (4) கொண்டுசெல்வது கடினமாக இருத்தல்.

**1.4** கீழ்வருவனவற்றுள் பணச் சந்தையில் ஒரு பங்கேற்பாளராக இருப்பவர் யார்?

(1) அரசாங்கம். (2) காப்புறுதிக் கம்பனிகள்.

(3) வர்த்தக வங்கிகள். (4) மேற்கூறிய யாவும்.

**1.5** கீழ்வருவனவற்றுள் போட்டரின் ஐந்து படைகள் (Five Forces) பகுப்பாய்விலுள்ள ஒரு படையாக **அமையாதது** எது?

(1) தொழில்துறைக்கான புதிய பிரவேசிப்பாளர்களின் அச்சுறுத்தல்.

(2) போட்டியாளர்களின் பேரம்பேசும் வலு.

(3) பிரதியீட்டுப் பொருள்களின் அச்சுறுத்தல்.

(4) வழங்குநர்களின் பேரம்பேசும் வலு.

**1.6** நபர் ஒருவர் காப்புறுதி செய்ய **முடியாத** இடரைக் கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

(1) பொருளாதார மந்தநிலை காரணமான இழப்புகள்

(2) விபத்துக்களிலிருந்து சாத்தியமான இடர்.

(3) தனது சொந்த உயிருக்கு ஏற்படும் இடர்.

(4) மேற்கூறிய யாவும்.

**1.7** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** பதிவு செய்தல் தேவையில்லை.

**(b)** தொடர்ந்தியங்கும் என்ற கோட்பாடு இல்லை.

**(c)** இது நீண்ட கால நோக்கத்தைக் கொண்டது.

மேலுள்ளவற்றுள், கூட்டு முயற்சி (Joint Venture) தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்களாவன :

(1) **(a)** மாத்திரம். (2) **(b)** மாத்திரம்.

(3) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.8** கீழ்வரும் நிறுவனங்களில் இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை **செய்யப்படாத** நிறுவனம் எது?

(1) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF). (2) ஊழியர் சேமலாப நிதியம் (EPF).

(3) குத்தகைக் கம்பனிகள். (4) உரிமம் பெற்ற விசேடத்துவ வங்கிகள்.

**1.9** கீழ்வருவனவற்றுள் முறைசார் வணிகமொன்றின் ஒரு பண்பாக **அமையாதது** எது?

(1) ஒரு பொருளாதார நடவடிக்கை காணப்படல்.

(2) நிச்சயமற்ற தன்மை காணப்படாமை.

(3) கொள்வனவு, விற்பனை அல்லது பரிமாற்றமொன்று காணப்படல்.

(4) இலாபத்தால் ஊக்குவிக்கப்படல்.

**1.10** கீழ்வருவனவற்றுள் பணச் சந்தையிலுள்ள ஒரு கருவிக்கான உதாரணமாக அமைவது எது?

(1) சாதாரண பங்குகள். (2) திறைசேரி முறி.

(3) வர்த்தகத் தாள்கள். (4) மேற்கூறிய யாவும்.

*கீழே இல* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.11** ஒரு சட்டபூர்வ அடையாளம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு வணிக நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி என அழைக்கப்படுகிறது.

**1.12** ஊழியர் சேமலாப நிதியம் (EPF) என்பது நிகழ் நேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையின் ஒரு பங்கேற்பாளர் ஆகும்.

**1.13** காசோலை என்பது சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஒரு கொடுப்பனவு முறை ஆகும்.

**1.14** தூரநோக்கு (Vision) என்பது ஒரு நிறுவனம் அதையொத்த வேறு நிறுவனங்களிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குகின்ற ஒரு கூற்று ஆகும்.

**1.15** இழப்பீட்டுக் கோட்பாட்டின்படி, காப்புறுதியிலிருந்து இலாபம் ஈட்டுவது தடுக்கப்பட்டுள்ளது.

*இல.* **1.16** *தொடக்கம்* **1.20** *வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** வணிகத்திற்கான ஒரு விநியோக வழியின் (distribution channel) இரண்டு (02) அனுகூலங்களைக் குறிப்பிடுக.

**1.17** "பசுமைத் தொழில் முயற்சியாண்மை" என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** "மூலதனச் சந்தைக்கும் பணச் சந்தைக்குமிடையிலான" இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**1.19** ஒரு காசோலையை ஏற்க மறுக்கின்ற (dishonoured) இரண்டு (02) வழிகளைக் குறிப்பிடுக.

**1.20** தொழில் முயற்சியாளருக்கும் முகாமையாளருக்குமிடையேயான இரண்டு (02) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**அமில** என்பவர் சில வருடங்களுக்கு முன், ஒரு தனியுடமை வியாபாரமாக **அமில பேக்கர்ஸ்** என்ற வியாபாரத்தை ஆரம்பித்தார். பின்னர், **பிலினா** என்பவர் **அமிலவுடன்** இணைந்ததுடன் அவர்கள் இந்த பேக்கரியை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ், **வரையறுக்கப்பட்ட டேஸ்ரி பேக்கர்ஸ் (தனியார்) கம்பனி** என்ற பெயரில் கூட்டிணைத்தனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளைத் தவிர 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படக்கூடிய இரண்டு (02) வெவ்வேறு வகையான கம்பனிகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) கீழ்வரும் பண்புகளின் அடிப்படையில், ஒரு தனியுடமை வியாபாரத்திற்கும் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்குமிடையிலான வேறுபாடுகளைக் **குறிப்பிடுக** :

(i) சட்டபூர்வ ஆளுமை.
(ii) கட்டுப்பாடு.
(iii) தொடர்ச்சித்தன்மை.
(iv) கணக்கீடு மற்றும் கணக்காய்வு.

(04 புள்ளிகள்)

(c) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியின் இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ரஷ்மி** என்பவர் 2015 இல் **ஹேன்டி ஸ்டைல்** என்ற பெயரில் ஓர் ஆடையகத்தைத் தொடங்கினார். **ஹேன்டி ஸ்டைல்** அதன் கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தாள்களையும் காசோலைகளையும் பயன்படுத்துகிறது. எவ்வாறாயினும், கோவிட் 19 நோய்த்தொற்றுடன் **ரஷ்மி** அனைத்து வணிகக் கொடுக்கல் வாங்கல்களையும் ஒன்லைன் ஊடாகவே மேற்கொள்ள வேண்டியிருந்தது. தற்போது அவர் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களையும் இலத்திரனியல் பணத்தைப் (E-money) பயன்படுத்தி மேற்கொள்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) "நாணயத்தாள் (currency) என்பதால் கருதப்படுவது யாதென **வரையறை செய்க.** (02 புள்ளிகள்)

(b) காசோலை ஒன்றை எழுதும்போது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நான்கு (04) விடயங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு இலத்திரனியல் பணம் ஏன் ஒரு பிரபலமான முறையாகக் கருதப்படுகிறது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**டிஜித்** என்பவருக்குச் சொந்தமான ஒரு உள்நாட்டு டிஜிடல் அச்சகமான **டிஜித் பிரின்டர்ஸ்** ஆனது இலங்கையிலுள்ள ஒரு சிறியளவான தொழில் முனைவகமாகும். எவ்வாறாயினும், டிஜிடல் அச்சகத் துறையில் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதில் **டிஜித்** தனது வகிபாகத்தை ஏற்பிசைவு செய்துள்ளார். இந்த நடைமுறைகள் சமீபத்திய அரசாங்கத்தின் முன்முயற்சிகளுடன் இணைந்ததாக உள்ளன. அத்துடன் சுற்றுச்சூழல் உணர்வுள்ள வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் வணிகத்திற்கும் சமூகத்திற்குமிடையே வெற்றி-வெற்றி (win-win) சூழ்நிலையை உருவாக்கவும் உதவுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) அரசாங்கத்தின் மூன்று (03) நோக்கங்களைப் **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) **டிஜித் அச்சகத்தின்,** சமூகம் தொடர்பான மூன்று (03) பொறுப்புக்களை **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(c) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவகங்கள் (SMEs) இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**தருஷ் பேர்னிச்சர்** என்பது **தருஷ்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுரிமைத் தளபாட வணிகமாகும். இது தளபாடங்களைத் தயாரிப்பதற்கான அதன் பிரதான மூலப்பொருளான மிகவும் அரிதான வகை மரங்களை இந்தோனேசியாவிலிருந்து இறக்குமதி செய்கிறது. காலநிலை மாற்றமானது மரத் தளபாட வணிகத்தை சீர்குலைத்ததுடன் மரங்களின் விலைகளிலும் அதன் வழங்கல் சங்கிலியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. **தருஷ்** இதற்கு மாற்றீடான புதிய மூலப்பொருளாக, உள்ளூரில் விரைவாக வளர்கின்ற ஒரு வகை மூங்கில் மரத்தை இனங்கண்டுகொண்டதுடன், அது இறக்குமதிகளை நம்பியிருப்பதையும் குறைத்திருந்தது. இந்தப் புத்தாக்கமானது வணிகத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தியதுடன் மாறிவரும் உலகளாவிய சூழலுக்கு ஏற்ப நாமும் மாறுவதன் முக்கியத்துவத்தையும் எடுத்தியம்பியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம் ஆகியவற்றுக்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **தருஷ் பேர்னிச்சர்** மீதான உலகளாவியச் சூழலின் இரண்டு (02) தாக்கங்களை (impacts) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) **தருஷி**டமுள்ள நான்கு (04) தொழில்முனைவோருக்கான பண்புகளை (entrepreneurial qualities) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

இலங்கையில் சூழல் - நேய துப்புரவுச் சேவைகளுக்குச் சந்தையில் நிலவும் இடைவெளியை சமீபத்தில் பட்டம் பெற்ற ஓர் இளம் தொழில்முனைவோரான **மல்லிகா** அவதானித்தார். அவரது தொழில்முனைவோர் மனப்பான்மை புத்தாக்கத்தை உந்துகிறது. வர்த்தகக் கட்டடங்களுக்கு நீடித்திருக்கத்தக்க உற்பத்திப் பொருள்கள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கென அர்ப்பணிக்கப்பட்ட **"எக்கோ – கிளீன்"** என்ற ஒரு கம்பனியை அவர் தொடங்கியுள்ளார். இது மிகவும் நீடித்திருக்கத்தக்க எதிர்காலத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்கிறது.

**எக்கோ-கிளீன்** ஆனது பல்வேறு ஆதரவுச் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றி பெறுகிறது. அதன் விரிவாக்கத்திற்கான கடன்களை வங்கிகள் வழங்கியுள்ளதுடன் **மல்லிகாவை** உபகரணங்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைகளில் முதலீடு செய்ய அனுமதித்தது. **எக்கோ கிளீனின்** வலுவான ஒன்லைன் இருப்பும் பசுமையைக் கட்டியெழுப்புகின்ற முன்முயற்சிகளைக் கொண்ட பங்குடமைகளும், புதிய சேவைநாடுநர்களை ஈர்ப்பதுடன், பண்டக்குறி பற்றிய விழிப்புணர்வையும் அதிகரிக்கிறது. மேலும் **மல்லிகா** சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளுடன் இணக்கமாகச் செயற்படுவதை உறுதிசெய்வதற்கான சட்ட ஆலோசனைகள் பற்றித் தேடுகின்ற அதே வேளை வணிகத்தின் சாத்தியமான இடர்களுக்கு எதிரான பதுகாப்பை காப்புறுதி வழங்குகிறது.

எவ்வாறாயினும், அவர் தனது பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட வணிக முகாமைத்துவ அறிவுக்கு ஏற்ப, வணிக உலகில், நாட்டதாரர்கள் மற்றும் அவர்களுடைய செல்வாக்கு பற்றிய ஆழ்ந்த புரிதல் தேவை என்பதை அவர் அறிந்திருந்தார். அதற்கிணங்க, அவர் தனது நாட்டதாரர்கள் மற்றும் அவர்களுடைய தாக்கங்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்தார். சுற்றுச்சூழல் உணர்வுள்ள வணிகங்கள் **எக்கோ-கிளீனின்** சுற்றுச்சூழல் மீதான கவனக்குவிப்பால் ஈர்க்கப்படுகின்றன என்பதை அவர் புரிந்து கொண்டார். இது பண்டக்குறியின் புகழையும் சேவைநாடுநரின் விசுவாசத்தையும் அதிகரிப்பதற்கு வழிவகுக்கிறது. இருப்பினும், திருப்தியற்ற சேவைநாடுநர்கள் எதிர்மறையான மதிப்புரைகள் ஊடாக கம்பனியின் நற்பெயரைச் சேதப்படுத்தலாம். வினைத்திறனான துப்புரவு மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதிப்படுத்துவதற்கு நன்கு பயிற்றப்பட்டதும் ஊக்கமளிக்கப்பட்டதுமான பணியாளர்களின் தேவை காணப்படுகிறது. எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார நிலைமைகள் காரணமாக, ஊழியர் புரள்வு வீதம் உயர்வாக இருப்பதற்கான சாத்தியமான இடர் காணப்படுவதுடன், இது செயல்பாடுகளைச் சீர்குலைத்து தரத்தையும் பாதிக்கலாம். அவருடைய அநேகமான வழங்குநர்கள் சூழல் - நேயம் மிக்க துப்புரவுப் பொருள்களை நம்பகமான முறையில் வழங்குபவர்களாக உள்ளனர். இருப்பினும்கூட, நம்பகத்தன்மையற்ற வழங்குநர்கள், இருப்புப் பற்றாக்குறை மற்றும் சேவைத் தடங்கல்களுக்கு வழிவகுக்கலாம்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) SWOT பகுப்பாய்வைப் பயன்படுத்தி, **எக்கோ-கிளீனின்** வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) **எக்கோ-கிளீனின்** நான்கு (04) நாட்டதாரர்களைப் (stakeholders) **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(c) இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் கடன்கள் வழங்குவதைத் தவிர, வணிகங்களுக்கு வழங்கப்படும் நான்கு (04) சேவைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **எக்கோ-கிளீன்** இற்கு காப்புறுதி ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) **எக்கோ-கிளீன்** தங்களது பிரதான வணிக நடவடிக்கைகளுக்கு அப்பால், இலங்கையில் மிகவும் நீடித்திருக்கத்தக்க எதிர்காலத்திற்கு எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பதற்கான இரண்டு (02) வழிமுறைகளை (ways) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |